தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1983, பிப்ரவரி 1

தை 19, துந்துபி திவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது,

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்

நுண்பொருள் காண்பது அறிவு.''

தான் சொல்லுவதை எளிதாக விளங்கும் சொற்களால் பிறர் மனத்தில் பதியும்படி சொல்ல வேண்டும், பிறர் சொல்லும் சொற்களில் உள்ள நுட்பமான பொருளை ஆராய்ந்து அறியவும் வேண்டும். இவ்வாறு சொற்களைப் பயன்படுத்தும் ஆற்றலையும் புரிந்து கொள்ளும் திறனையும் உடையவரே அறிவுடையவர் ஆவார்.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. கே. மாரப்ப கவுண்டர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. மாரப்ப கவுண்டர் அவர்கள் 19-11-1982 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. மாரப்ப கவுண்டர் அவர்கள் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும் இரு முறை கோயம்புத்தூர் மாவட்டம் அவினாசி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அவினாசி கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவராகவும், அவினாசி கூட்டுறவு பால் விநியோக சங்கத்தின் தலைவராகவும், அவினாசி கூட்டுறவு அங்காடியின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரங்கல் குறிப்பு

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 81—திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் துணை மின் நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்துணை மின் நிலையம் நடப்பு நிதி ஆண்டில் இயக்கி வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. பெ. திருமாறன்: தலைவரவர்களே, ஆலங்குடியில் துணை மின் நிலையம் அமைக்க நீண்ட நாட்களாக அந்தத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு அந்த இடத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது காலதாமதம் ஆவதால் அங்கேயுள்ள 110 கடலை மில்களும், ஏறக்குறைய 500-க்கும் மேற்பட்ட வடகாடு, கொத்தமங்கலம் பகுதிகளில் உள்ள பம்பு செட்டுகளும், நிஜாம் பேப்பர் மில்லும், மேலும் இன்னும் பல தொழிற்சாலைகளும் அங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இந்தத் துணை மின் நிலையத்தைத் துரிதப்படுத்திக் கட்டி முடித்தால் மின்சாரம் சீராகக் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, அரசு உடனடியாக நடவடிக்கைஎடுத்து துரிதப்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 18-9-82 அன்று நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு விரைவில் இக்காரியத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்